## இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்

**22 மே 2015 / 03 ஷஃபான் 1436**

## <u>இறைநம்பிக்கையாளர்கள், தமது வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான பாடங்களை இஸ்றா, மிஃராஜ் நிகழ்ச்சியில் பெறலாம்.</u>

اَلْحَمْدُ للهِ الْمَلِكِ الْحَقِّ الْمُبِيْنِ الَّذِي أَبَانَ لِعِبَادِهِ مِنْ آيَاتِهِ مَا
بِهِ عِبْرَةً لِلْمُعْتَبِرِيْنَ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللّهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ
لَهُ إِلَهَ الأَوَّلِيْنَ وَالآخِرِيْنَ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً عَبْدُهُ
وَرَسُوْلُهُ الْمَبْعُوثُ رَحْمَةً لِلْعَالَمِيْنَ. اَللّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا
مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيماً كَثِيْرًا . أَمَّا بَعْدُ فَيَا
عِبَادَ اللّهِ اتَّقُوْا اللّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

---

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

புனிதமிக்க இந்த வெள்ளிக்கிழமை தினத்தில், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது ”தக்வா” (பயபக்தியும்) , நம்பிக்கையும் அதிகரிக்க வேண்டுமென அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம் வேண்டிக் கொள்வோமாக! அவனிடம் நமது

பாவங்களை நினைத்து வருந்துவோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளையும் நிறைவேற்றுவதற்கும் அவன் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கும் கடின முயற்சி செய்வோமாக! இவ்வுலக வாழ்வில் அல்லாஹ்வின் அருட்களைத் தவிர வேறு எதையும் நாம் விரும்பவில்லை.

சகோதரர்களே!

”ரஜப்” மாதம் நம்மிடம் வந்து, கடந்து சென்று விட்டது. நாம் பலமுறை இஸ்றா, மிஃராஜ் சம்பவம் பற்றி நினைவூட்டப் பட்டுள்ளோம். இச்சம்பவம் நமது இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட ஒரு அசாதாரணமான அனுபவமாகும். இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு, அல்லாஹ்வை மிகவும் நெருக்கமாக இருந்து சந்திக்கும் வாய்ப்பை இச்சம்பவம் வழங்கியது. இம்மரியாதை, இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களுக்கு முன்பு வேறு யாருக்கும் வழங்கப்படவில்லை. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமது இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு வழங்கியுள்ள சிறப்பான அந்தஸ்தையும், உயர்வான மரியாதையையும் இச்சம்பவம் நினைவூட்டுகிறது. இப்படிப்பட்ட ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் உம்மத்தினராக, பின்பற்றுபவர் களாக நம்மை அல்லாஹ் தேர்ந்தெடுத்திருப்பது நமக்கு அல்லாஹ் வழங்கியுள்ள சிறப்பாகும். மறுமையில், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களுடன் ஒன்று கூடும் பாக்கியத்தையும், அவர்களைச்

சந்திக்கும் பாக்கியத்தையும்  நம்மிடமிருந்து அல்லாஹ் பிடுங்கிக் கொள்ளாதிருப்பானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

ஜமாஅத்தார்களே!

இஸ்றா, மிஃராஜ் சம்பவம் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு அருட்கொடையாக இருந்த போதிலும் அச்சம்பவம் நடைபெறுவதற்கு முன்பு ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் பலவித கஷ்டங்களையும், சோதனைகளையும் அனுபவித்தார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் மிகப் பெரிய அளவில் சோதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு மிகப் பெரிய அளவில் பாதுகாப்பாளர்களாகவும் ஆதரவாளர்களாகவுமிருந்த அவர்களின் பாசத்திற்குரிய மனைவியும், பெரிய தந்தையும் இறைவனடி சேர்ந்து விட்டிருந்தனர். அதற்கு முன்பு இறைத்தூதர்(ஸல்) அவர்களும் அவர்களின் குடும்பத்தார்களும் பொருளாதார ரீதியில் பகிஷ்காரம் செய்யப்பட்டிருந்தார்கள். ஊர் விலக்கி வைக்கப்படிருந்தார்கள். அதன் காரணமாக, பல வருடங்களாக சரியான உணவு, பானமின்றி கஷ்டப்பட்டார்கள். இஸ்றா, மிஃராஜின் ஆச்சரியங்களை அனுபவிப்பதற்கு முன்பாக இவ்வாறு பலவிதமான கஷ்டங்களையும் சோதனைகளையும் ரசூலுல்லாஹி(ஸல்) எதிர்கொண்டார்கள்.

அல்லாஹ்வைச் சந்திப்பதற்கான அழைப்பைப் பெறுவதற்கு முன்பாக இறைத்தூதர்(ஸல்) அவர்கள் எதிர்கொண்ட கஷ்டங்களும்

சவால்களும் அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்ட வாழ்க்கையின் நியதி (சுன்னத்துல்லாஹ்) என மர்ஹூம் ஷேக், "டாக்டர் ரமதான் புதி" அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இங்கு "சுன்னத்துல்லாஹ்" என்றால், எப்போதெல்லாம் நாம் கஷ்டங்களையும், சோதனை களையும் சவால்களையும் எதிர்கொள்கின்றோமோ அவற்றைத் தொடர்ந்து இலகுவும், அருட்களும், சௌகரியங்களும் நமக்கு உருவாகும் என்பதாகும்.

இக்கருத்தை திருக்குர்ஆனின் "அஷ்-ஷரஹ்" எனும் அத்தியாயத்தின் 5-6-வது வசனங்களில் அல்லாஹ் பின்வருமாறு வாக்களிக்கின்றான்:

فإنّ مع العُسرِ يُسرا   إنّ مع العُسر يُسرا

பொருள்: நிச்சயமாக சிரமத்துடன் இலேசு (சுகம்) இருக்கிறது. நிச்சயமாக சிரமத்துடன் தான் இலேசு (சுகம்) இருக்கிறது.

அன்பிற்குரிய எனது சகோதரர்களே!

வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்கள் மற்றும் சோதனைகளை விட்டும் தப்பித்து நாம் எங்கும் ஓடி விட முடியாது. நம்மிடமுள்ள சுகமான நிலைகள் மற்றும் அருள்களிலும் நாம் சோதிக்கப்படுவோம். இக்கருத்தைத் திருக்குர்ஆனின் "அல்-பகராஹ்" எனும் அத்தியாயத்தின் 155-156-வது வசனங்களில் பின்வருமாறு அல்லாஹ் கூறுகின்றான்:

பொருள்: (இறை நம்பிக்கையாளர்களே!) ஓரளவு பயத்தாலும், பசியாலும், பொருட்கள், உயிர்கள், கனி வர்க்கங்கள் (விளைச்சல்கள்) ஆகியவற்றில் நஷ்டத்தை ஏற்படுத்தியும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம்; (நபியே! இச்சோதனைகளில்) பொறுமை யோடு இருந்தவர்களுக்கு (சுவனத்தைக் கொண்டு) நீர் நன்மாராயங் கூறுவீராக!

மேற்கண்ட வசனம், நமது செல்வங்கள், உடல் நலம் மற்றும் நமது பாசத்திற்குரியவர்கள் போன்றவர்களின் விஷயத்தில் நாம் நிச்சயம் சோதிக்கப்படுவோம் எனத் தெளிவாகக் கூறுகின்றது. அவ்வாறெனில், இறைநம்பிக்கையுள்ள ஆணும் பெண்ணும் இது போன்ற சவால்களையும் கஷ்டங்களையும் எவ்வாறு எதிர்கொள்வது? கஷ்டங்களை எதிர்கொள்ளும் போது நமது மனோபாவம் எப்படி இருக்க வேண்டும்? என இங்கு சிந்திக்க வேண்டும். எனது சகோதரர்களே! பிரச்சனைகளை வெல்வதற்காக நாம் மேற்கொள்ளும் முயற்சிகளையும், கடைப்பிடிக்கும் பொறுமையையும் அல்லாஹ் வீணாக்குவதில்லை என்பதை எப்போதும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நான் சற்று முன்பு உங்களுக்கு முன்பாக ஓதிக் காட்டிய வசனங்களை அடுத்துள்ள 157-வது வசனம், கஷ்டங்களை எதிர்கொள்ளும் போது பொறுமையுடன் இருப்பவர்கள் எவ்வாறு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் அளவில்லா அருட் கொடைகள் வழங்கப்படுவார்கள் என்பதை விளக்குகிறது.

எனது சகோதரர்களே! அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு சோதனையும் ஒரு நல்ல நோக்கத்துக்காக ஏற்படுத்தப்படுகின்றது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். அல்லாஹ் மேற்கொண்டு நமக்கு நன்மையை நாடுகின்றான் என நமக்கு அது நினைவூட்டுகின்றது. ரசூலுல்லாஹி (ஸல்) நவின்ற பின்வரும் ஹதீதை இமாம் திர்மிதி (ரஹ்) தனது கிரந்தத்தில் பதிவு செய்துள்ளார்கள்:

"ஜனங்களில் ஒரு வகுப்பாரை அல்லாஹ் விரும்பும் போது அவர்களை அல்லாஹ் சோதிப்பான்"

எனவே, எனது சகோதரர்களே!
கஷ்டங்களை நாம் எதிர்கொள்ளும் போது நிராசையாகக் கூடாது. காரணம், அவை அல்லாஹ்வை நினைவில் கொள்வதற்கான வாய்ப்பையும், அவன் பக்கம் நெருங்குவதற்கான வாய்ப்பையும் நமக்கு ஏற்படுத்துகிறது. நாம் செல்வ வளத்துடன், செழிப்பாக இருக்கும் போது அல்லாஹ்வை மறந்து விடுகிறோம் என்பது இயல்பான விஷயம் தான். அந்நிலையில், அல்லாஹ் தன் பக்கமாக நம்மைத் திருப்புவதற்காகவும், அவனிடம் நாம் உதவிகள் தேடுவதற் காகவும் நமக்கு கஷ்டங்களை ஏற்படுத்துகின்றான். எனவே நாம் சோதிக்கப்படும் போது நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். காரணம், அவ்வாறு நாம் சோதிக்கப்படுவதானது, எப்போதும் நாம்

சுகபோகங்களில் மூழ்கி வழி தவறி விடுவதை அல்லாஹ் விரும்பவில்லை என்பதற்கான அடையாளமாக உள்ளது.

உண்மையில், எவர்கள் அதிகமான கஷ்டங்களை எதிர்கொள்கி றார்களோ அவர்களை அல்லாஹ் அதிகம் நேசிக்கின்றான். இக்கருத்து ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள்ள பின்வரும் ஹதீதின் மூலம் புரிய வருகிறது:

"ஜனங்களில் அதிகமாக சோதிக்கப்பட்டவர்கள் இறைத்தூதர்களாகிய அன்பியாக்கள் ஆவர். பின்பு அவர்களைப் போன்று இருந்தவர்கள் அதிகமாக சோதிக்கப்பட்டார்கள். பின்பு அவர்களைப் போன்று இருந்தவர்கள் அதிகம் சோதிக்கப்பட்டார்கள். ஒருவரிடம் எந்த அளவு இறைநம்பிக்கை காணப்படுகிறதோ அந்த அளவு அவர் சோதிக்கப்படுகிறார். ஒருவரது இறைநம்பிக்கை உறுதியாக இருந்தால் அவருக்கு ஏற்படுத்தப்படும் சோதனைகளும் உறுதியாக, கடுமையாக இருக்கும். ஒருவரது இறைநம்பிக்கை பலஹீனமாக இருந்தால் அவருக்கு ஏற்படுத்தப்படும் சோதனைகளும் அவ்வாறே இருக்கும்" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் இப்னு மாஜா ரஹ், இமாம் திர்மிதி ரஹ்)

மேற்கண்ட ஹதீதாகிறது, அல்லாஹ் தனது அடியார்களை அவர்களது சக்தியை விட அதிகமாகச் சோதிப்பதில்லை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. எனினும், அவர்கள் அச்சோதனைகளை

வெற்றிகொள்வதற்காக பொறுமையாக இருந்து, கடின முயற்சி செய்தால் இறுதியில் மிகப் பெரிய வெகுமதிகளை அவர்கள் அடைந்து கொள்வார்கள் என்பதையும் நினைவூட்டுகிறது. எனவே, ஒரு முஃமின், சோதனைகளை, எல்லாம் நன்மைக்கே எனும் திடமான எண்ணத்துடன் எதிர்கொள்வார். காரணம், அவற்றின் மூலம் தனது அந்தஸ்த்தை அல்லாஹ் உயர்த்த விரும்புகிறான் என அவர் நம்புகிறார். நாம் ஒவ்வோரு பிரச்சனைகளை பொறுமை மற்றும் சகிப்புத் தன்மையுடன் எதிர்கொள்ளும் போதெல்லாம் அல்லாஹ் மற்றும் அவனது சொர்க்கத்தின் பக்கம் ஒரு அடி எடுத்து வைக்கின்றோம் என்ற உண்மையை, சகோதரர்களே! நாம் நம்ப வேண்டும். இறைத்தூதர்(ஸல்) நவின்றுள்ளார்கள்:

"ஒரு முஸ்லிம், களைப்பு, வலி, பயம், கவலை, ஆபத்து மற்றும் கஷ்டம் போன்ற எப்பிரச்சனையை எதிர்கொண்டாலும், ஒரு சிறிய முள் குத்தி வேதனையை உணர்ந்தால் கூட, அவரது பாவங்களை அல்லாஹ் மன்னிக்கின்றான்" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

ஜமாஅத்தார்களே!

இதுதான், ஒவ்வொரு சவால் மற்றும் சோதனைக்கும் பின்னணியில் உள்ள தத்துவமாகும். அவை நமது உள்ளங்கள் மிருதுவாக ஆகுவதற்கும் நம்மை நாம் அல்லாஹ்விடம் ஒப்படைத்துக் கொள்வதற்குமான வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன. எவர்கள்

சோதனைகளை எதிர்கொள்ளவில்லையோ அவர்கள் கர்வம் மிகுந்தவர்களாகவும், மற்றவர்களின் துரதிருஷ்டமான நிலையைக் கண்டு அவர்கள் மீது குறைவாக இரக்கம் கொள்பவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள்.

எனவே, இன்று சுகமான வாழ்க்கை வாழ்ந்து வரும் நாம், கஷ்டங்களை எதிர்கொண்டு வரும் நமது இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் மற்றும் பொதுவாக மனிதகுலம் அனைவரின் நலனுக்காகவும், சவால்களை எதிர்கொள்வதற்கான ஆற்றல் அவர்கள் வழங்கப்பட வேண்டுமெனவும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

எனது சகோதரர்களே!

நான் தற்போது உங்கள் முன்பாக ஓதிக் காட்டிய அனைத்து ஹதீதுகள் மற்றும் இஸ்றா, மிஃராஜ் நிகழ்ச்சி மூலம் பெறப்பட்ட பாடங்கள் மூலம், ஒரு இறைநம்பிக்கையாளருக்கு அவரது இறைநம்பிக்கையானது, ஆன்மீக பலத்தையும், சோதனைகள் மற்றும் பெருந்துன்பங்களை எதிர்கொள்வதில் உடன்பாடான மனோபாவத்தையும் ஏற்படுத்துகின்றது என்பது தெளிவாகப் புலனாகிறது. இறைநம்பிக்கை ஒருவரிடம் தைரியத்தைத் தூண்டுகிறது. அவர் தனது இறைவனைச் சந்திக்கும் வரை இறைவனுக்காக வாழும் ஆற்றலை அவரிடம் ஏற்படுத்துகிறது. நாம் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் போது பின்வரும் பிரார்த்தனையைச் செய்ய வேண்டுமென இறைத்தூதர்(ஸல்) நமக்குக் கற்றுத்

தந்துள்ளார்கள். அந்த பிரார்த்தனையை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்:

إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ اللَّهُمَّ آجِرْنِى فِى مُصِيبَتِى وَأَخْلِفْ لِى خَيْرًا مِنْهَا

பொருள்: நாம் அனைவரும் அல்லாஹ்வுக்குச் சொந்தமானவர்கள். அவன் பக்கமே நாம் மீள இருக்கின்றோம். யா அல்லாஹ்! நான் எதிர்கொள்ளும் இந்த கஷ்ட, நஷ்டத்திற்குப் பதிலாக சிறந்த கூலியை எனக்கு வழங்குவாயாக! இதற்குப் பதிலாக இதை விடச் சிறந்ததை வழங்குவாயாக! (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப் பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

நம்மில் பலர், ஏதாவதொரு வகையில், தற்காலத்தில் எதிர்கொண்டு வரும் சோதனைகளை அல்லாஹ் இலேசாக்குவானாக! அல்லாஹ் நமது பொறுமைக்குப் பகரமாக, அவனை நாம் சந்திக்கின்ற போது, தனது சொர்க்கம் எனும் வெகுமதியை நமக்கு வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمِ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.